APRIL/MAY 2025

23ITA21/23UTA21 — அற இலக்கியம்

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. பெய்யும் மழை போன்றவள் என்று வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?

2. குழல் இனிது யாழ் இனிது என்று கூறுபவர்கள் யாவர்?

3. 'சிறைஇல் கரும்பினைக் காத்து ஓம்பல் இன்னா' பொருள் கூறுக.

4. ஒழுக்கமுடன் வாழ்தலால் பெறும் பயன்கள் யாவை?

5. திரிகடுகம் பெயர்க்காரணம் கூறுக.

6. 'உடம்பொழிய வேண்டின் உயர்தவம்' என்று சிறுபஞ்சமூலம் கூறுவதன் பொருள் யாது?

7. யார் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் என்கிறது மூதுரை?

Shanmuga Industries Arts & Science College T.V.Malai

8. 'பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்' — பொருள் கூறுக.

9. யாரோடு இணங்குதல் வேண்டாம் என்கிறது உலகநீதி?

10. குமரகுருபரர் — சிறுகுறிப்பு தருக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) அறநெறியாளனுக்குப் பழமொழி நானூறு கூறும் உபதேசங்கள் யாவை?

(அல்லது)

(ஆ) அறிவுப்பத்து — விளக்குக.

12. (அ) நல்லார் கேட்டால் நகைப்பதாகத் திரிகடுகம் கூறுவது யாது?

(அல்லது)

(ஆ) கல்வியின் முக்கியத்துவம் குறித்து இனியவை நாற்பது கூறுவது யாது?

13. (அ) சிறுபஞ்சமூலம் பெயர்க்காரணம் பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) திரிகடுகம் கூறும் தனிமனித ஒழுக்க நெறிகள் யாவை?

Shanmuga Industries Arts & Science College T.V.Malai

14. (அ) நல்லவர்களின் சிறப்புகளாக மூதுரை கூறுவது யாது?

(அல்லது)

(ஆ) வெற்றி வேற்கை அறமுரைக்கும் பாங்கினை விளக்குக.

15. (அ) உலக நாதர் — ஆசிரியர் குறிப்பு தருக.

(அல்லது)

(ஆ) அறநெறிச் சாரம் — பெயர்க்காரணம் கூறுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விரிவான விடையளி.

16. இல்வாழ்க்கை குறித்து வள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

17. இனியவை நாற்பது கூறும் அறக்கருத்துகளை எடுத்துரைக்க.

18. ஒத்த ஒழுக்கங்கள் பற்றி சிறுபஞ்சமூலம் கூறுவனவற்றை விரித்துரைக்க.

19. ஔவையின் அறங்கூறும் தனித்துவத்தை ஆராய்ந்து விளக்குக.

20. குமரகுருபரர் கூறும் அறக்கருத்துக்களை நும் பாடப்பகுதி கொண்டு விளக்கியுரைக்க.

———————